இச்சடங்கின் புனிதச் சூழலை மேம் படுத்துகிறது. நெற்றிப் பட்டம் அணிந்த யானை ஊர்வலம் கம்பீரமானது; காண இனியது. பதினெட்டாம் படி யிலிருந்து பம்பை நோக்கி ஊர்வலம் செல்வது பரவசம் தரும் அரிய காட்சி. பம்பை கணபதி கோயிலின் முன்பு பெரும் வரவேற்பு நிகழும். நில விளக்கும், நிறை நெல்லும் மங்கலம் பெருக் கும். தலைமை அர்ச்சகர் ஐயப்பனை ஏந்திய வண்ணம் மும்முறை நீரில் மூழ்கி எழுவார். இறையருள் அவ்வேளையில் அப்புனித நதியில் பெருகிச் சுரப்பதைக் கருத்தில் கொண்டு பக்தர்கள் நீராடிப் புத்துணர்ச்சி பெறுவர். ஆறாட்டு முடிந்ததும் ஊர்வலம் ஆலயம் திரும்பிவிடும்.


சபரிமலை விழா நிறைவு நிகழ்வான ‘ஆறாட்டு’

## ஆறு ஆதாரங்கள்

யோக நெறியின் நுட்பங்களையும் அர வணைத்து அகப்படுத்துகிறது ஐயப்ப வழிபாடு. யோக நெறி உடலையே ஆன்ம லட்சியத்தின் கருவியாகக் காண்கிறது. ஆறு ஆதாரங்களை உணர்த்தி, அவற்றின் வழி நிகழும் ஆற்றலின் அகப்பயணம் அங்கு வலியுறுத்தப்படும். புறத்தில் அமைந்த கோயில்களையும் யோக நெறி ஆறு ஆதார நிலைகளாக இசைவுறுத்திப் பேசும். சிவனுக்கும், முருகனுக்கும் போலவே சாஸ்தாவின் ஆலயங் களுக்கும் ஆறுதார இசைவு எடுத்துரைக்கப்படுவதுண்டு. அக முகப் பயணத்தை நினைவுறுத்தும் வகையில் இப்பார்வை உதவு கின்றது எனலாம்.

| ஆதாரநிலை | சிவபெருமான் | முருகன் | சாஸ்தா |
|---|---|---|---|
| 1. மூலாதாரம் | திருவாரூர் | திருப்பரங்குன்றம் | அச்சன்கோயில் |
| 2. சுவாதிஷ் டானம் | திருவானைக்கா | திருச்செந்தூர் | ஆரியங்காவு |
| 3. மணிபூரகம் | திருவண்ணா மலை | பழனி | குளத்துப்புழை |
| 4. அநாகதம் | சிதம்பரம் | சுவாமிமலை | பந்தளம் |
| 5. விசுத்தி | காளத்தி | குன்றுதோறுடல் | சபரிமலை |
| 6. ஆக்ஞை | காசி | பழமுதிர்சோலை | காந்தமலை |

# இ

## இஞ்சிப்பாறை

சபரிமலை யாத்திரையில் அழுதாமேட்டின் அருகேஅமைந்த பாறை. அழுதையாற்றில் நீராடிய ஐயப்பன்மார், பூஜைக்குப்பின் உணவருந்தி சுமார் இரண்டு மைல் தூரம் நடந்து அழுதைமேடு எனும் குன்றினில் ஏறி இஞ்சிப்பாறைக் கோட்டையை அடை கின்றனர். இதன் அருகே உள்ளது கல்லிடுங்குன்றம். இஞ்சிப் பாறைக் கோட்டை உதயணனின் முக்கியக் கோட்டை. ஸ்ரீ ஐயப்பனின் சாந்நித்தியம் தவழும் இடம். இஞ்சிப்பாறை மூப்பன் ஆலயம் இங்கு உள்ளது. ஐயப்பன்மார் தேங்காய் உடைத்துக் கற் பூரம் ஏற்றி வழிபடுவர். இக்கோயில் மலையரைய சபையின் நிர் வாகக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகும். பக்தர்கள் தங்கள் வழி நடைக் களைப்பைப் போக்க ஒய்வெடுக்கும் இடமாகவும் உள்ளது.

## இரும்புன்னிக்கரை

சபரிமலை யாத்திரையில் காடு தொடங்கும் இடம். சிவ பிரான், சுப்ரமண்யர், பலபத்ர தேவி ஆகியோர்க்கு ஆலயங்கள் உள்ளன. இங்கிருந்து 3 கி.மீ. தூரத்தில் அரசு முடிக்கோட்டை உள்ளது.

## இருமுடிக்கட்டு

பள்ளிக்கட்டு எனவும் படும். சபரிமலை யாத்திரையின் முக் கிய அங்கமாகத் திகழ்வது. இருமுடிக் கட்டின்றி யாரும் பதி னெட்டாம் படி மிதித்தல் இல்லை. பந்தள ராஜ குடும்பத்தினர் மட்டும் இதற்கு விதிவிலக்கு.

குருவின் வழிகாட்டலில் இருமுடி நிரப்பிக் கட்டுக் கட்டித் தலையில் சுமந்து சபரிமலை யாத்திரை தொடங்க வேண்டும். ஒரு பையில் நெய்த்தேங்காய் முதலிய நிவேதனப் பொருட் களும், மற்றொன்றில் வழித் தேவை கருதிய பிற பொருட்களும் நிரப்பிக் கட்டப்படும். இருமுடி தாமே சுமக்க வேண்டும். வழியில் இறக்க நேரிட்டால் குரு அல்லது மூத்த ஐயப்பனின் உதவியுடன் இறக்கி ஏற்ற வேண்டும். கட்டு ஒரு புனிதச் சுமை; முன் முடியில் ஐயப்பன் இருப்பதாக ஐதீகம்.

புலிப்பால் பெறச் சென்ற ஐயப்பனுக்கு உணவுப் பொருட் களை ஒரு பகுதியிலும், தேங்காய் ஒன்றினை மற்றொரு பகுதி யிலும் வைத்து இருமுடியாகக் கட்டிக் கொடுத்தார் பந்தள மன் னர். முக்கண் தேங்காய் போல் முக்கண்ணன் அருளும் வழித் துணையாக வரட்டும் எனக் கருதினார் தந்தை. இந்நினைவு நீட்சியே பள்ளிக் கட்டு என்பர்.

இருமுடி சுமத்தல் இருவினை சுமத்தலின் குறியீடு என்பது பொதுவான எளிய விளக்கம். ஆழ்ந்து நோக்குவோர்க்கு வாழ்க் கைப் பயணத்தில் (இறைமுடியும், இரை முடியும் இணைந்த) இருமுடிச் சுமையினை பயிலப் பணிக்கிறது பள்ளிக்கட்டு. உள்ளிருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே வாழ்க்கை. எனவே தெய்வீகமும், லௌகீகமும் நம் தலைமீது ஏறிய இரு முடிக்கட்டு, குருசாமியின் துணையோடு இரு முடியைச் சரிவரப் பிணைத்துக் கட்டித் தலைமீது சுமந்தால் சுமையே சுவையாகும்.